# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(எ - கா)

ஈபிள் கோபுரம் அமைந்துள்ள நாடு பிரான்சு.

( அமெரிக்கா, இத்தாலி, பிரான்சு )

1. முத்தமிழில் ஒன்று ______________ .

( ஓவியம், இசை, சிற்பம் )

2. வான் வழியாகச் செல்வதற்கு ______________ பயன்படுகின்றது.

( நீருந்து, பேருந்து, விண்ணுந்து )

3. 90 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .

( தொண்ணூறு, தொன்னூறு, தொந்நூறு )

4. அதியர்மான் ______________ ஆண்டு வந்தான்.

( நல்லூரை, தகடூரை, கடலூரை )

5. கப்பல், கதலி என்பன ______________ இனங்கள்.

( பலாவின், வாழையின், மாவின் )

6. தந்தைக்குத் தாய்போல மாமாவுக்கு ______________ .

( மாமி, மகள், பாட்டி )

7. அடங்காப்பற்று என்று அழைக்கப்பட்ட இடம்________________.

( யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி )

8. நீர் + தொட்டி என்பதைச் சேர்த்து எழுதினால்

________________.

( நீர்தொட்டி, நீர்த்தொட்டி, நீர்ந்தொட்டி )

9. தமிழீழத்தின் தேசியப் பறவை ________________ .

( செண்பகம், சேவல், மயில் )

10. குமாரசுவாமிப் புலவர் பிறந்த ஊர்________________.

(நவாலி, நல்லூர், சுன்னாகம்)

11. பெரிது என்பதன் எதிர்ச்சொல் ________________ .

( அடி, நுனி, சிறிது )

12. பாண்டியரது கொடி ________________ கொடியாகும்.

( மீன், வில், புலி)

13. நாலடியாரில் ________________ அதிகாரங்கள் உள்ளன.

( நாற்பது, இருபது, பத்து )

14. வாணி ________________ கவிதையை ஆசிரியர் பாராட்டினார்.

( எழுதிய, வரைந்த, கீறிய )

15. இளங்கோ அடிகளால் ____________________ எழுதப்பட்டது.

( மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்குறள் )

16. எறும்பின் அருகே புறா ____________________ ப் போட்டது.

( தடியை, இலையை, பூவை )

17. அறநூல்களில் சிறந்தது ____________________ ?

( எப்படி, எது, எப்போது )

18. **ஒலிவட்டு :**

மாவீரர் பற்றிய செய்திகள் ____________________

பொறிக்கப்பட்டிருக்கும்.

( நடுகல்லில், செங்கல்லில், படிக்கல்லில் )

19. வீட்டின் அடையாளத்தைப் பாடல் மூலம் கூறியவர்

____________________ .

( வில்லவராயர், குமாரசுவாமிப்புலவர், சின்னத்தம்பிப் புலவர் )

20. ஆதி ____________________ கோவிலுக்குச் சென்றான்.

(தங்கையுடன், தங்கையை, தங்கைக்கு )

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| தடதட | ஓடிஆடி | பாலும்தேனும் |
| கண்ணும் கருத்துமாக | பளபள | ~~பூவும்பிஞ்சும்~~ |

(எ - கா)

மாமரத்தில் பூவும்பிஞ்சும் காணப்பட்டன.

1. வளையல்கள் ______________ என மின்னின.

2. ________________ மிகவும் சத்துள்ள உணவுகளாகும்.

3. காவலர் மாடிப்படிகளில் ______________ என்று ஓடினர்.

4. தம்பி எந்நேரமும் ______________ விளையாடுவான்.

5. நாவரசன் பள்ளிப் பாடங்களைக் ____________________ ப் படிப்பான்.

புள்ளிகள் 10

3) **மிகப்பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.**

(எ - கா)

ஆசிரியரால் மாணவனுக்குப் பரிசு கொடுக்கப்பட்டது.

1. ஒருவர் செய்த உதவியை என்றும் மறக்கக்

_______________ .

2. நாட்டார் பாடல்கள் கேட்க இனிமையாக

_______________ .

3. **பழமொழி :** புலி பசித்தாலும் புல்லைத் _______________ .

4. தாத்தாவும் பாட்டியும் நாளை தாயகத்திலிருந்து

_______________ .

5. நிலா இரவில் ஒளியைத் _______________ .

புள்ளிகள் 10

## 4) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.

எ - கா

துணி நூலால் நெய்யப்படுகிறது.

(நூலால், நூளால் )

1. அணில் மரத்தில் __________ப் பழங்களைக் கொறித்தது.

   ( ஏரி, ஏறி )

2. __________ மெல்ல மெல்லத் தூறத் தொடங்கியது.

   ( மழை, மலை )

3. வண்டு பூவிலிருந்து __________க் குடித்தது.

   ( தேணை, தேனை )

4. யானையின் காது __________ இருக்கும்.

   ( பெரிதாக, பெறிதாக )

5. __________ உழுவதற்கு எருது பயன்படுகிறது.

   ( வயல், வயள் )

புள்ளிகள் 05

5) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ழு | கு | தெ | ன் | னை | செ |
| ப | | நெ | ல் | லி | ப | ண் |
| னை | அ | கொ | வ | | ரு | ப |
| ஆ | ன் | ன் | ல் | வே | ந் | க |
| ந் | ன | றை | லூ | ம் | து | ம் |
| தை | ம் | | று | பு | வா | கை |

**மரங்கள்** | **பறவைகள்**

(எ - கா)

| மரங்கள் | பறவைகள் |
|---|---|
| வாகை | வல்லூறு |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |

புள்ளிகள்10

## 6) மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| அங்காடிக்கு | ~~பிறந்தநாள்~~ | நண்பர்களுடன் |
| விழாவுக்கு | கட்டிகையும் | பழச்சாறும் |

(எ - கா)

வளவனின் தங்கை தேனிலாவுக்கு நேற்றுப் பிறந்தநாள் .

பிறந்தநாள் ________________ த் தேவையான பொருட்களை

வாங்குவதற்கு வளவனும் அப்பாவும் ________________ ச்

சென்றனர். அப்பா தேனிலாவுக்குப் புதிய ஆடையும்

________________ வாங்கினார். தேனிலா ________________

சேர்ந்து கட்டிகையை வெட்டினாள். பிறந்தநாள் விழாவுக்கு

வந்தவர்களுக்குப் பருகப் ________________ உண்பதற்குச்

சிற்றுண்டிகளும் வழங்கி மகிழ்ந்தாள்.

புள்ளிகள் 10

## 7) ஒரு சொல்லில் விடை எழுதுக.

(எ - கா)

ஆத்திசூடியை எழுதியவர் யார்?

ஔவையார்

1. சிங்கத்தின் தோட்டத்தில் பட்டம் விட்ட விலங்கு எது?

_______________________________

2. தமிழருடைய வீரத்தைப் பற்றிக் கூறும் நூல் எது?

_______________________________

3. ஆழிக்குமரன் ஆனந்தன் எவ்வூரில் பிறந்தார்?

_______________________________

4. அதியர்மான் ஏன் காட்டுக்குச் சென்றான்?

_______________________________

5. பண்டாரவன்னியன் யாருடன் போர் புரிந்தான்?

_______________________________

புள்ளிகள் 10

## 8) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒரு சிங்கம் காட்டில் வாழ்ந்து வந்தது. அது இரை தேடிச் சென்று கொண்டு இருந்தது. அப்போது சில ஆடுகளும் குட்டிகளும் புல் மேய்ந்து கொண்டு இருந்தன. அதைச் சிங்கம் கண்டது. ஆட்டுக் குட்டிகள் கொழு கொழு என்று இருந்தன. அவற்றில் ஒன்றைப் பிடித்துத் தின்ன சிங்கம் எண்ணியது. உடனே சிங்கம் பாய்ந்து ஓர் ஆட்டுக்குட்டியைப் பிடித்தது. அதைக் கண்ட ஆடுகள் ஒன்று சேர்ந்து சிங்கத்தைக் கொம்புகளால் குத்திக் கொன்றன. குட்டியும் காப்பாற்றப்பட்டது. பின்னர் ஆடுகளும் குட்டிகளும் மகிழ்ச்சியாக வாழ்ந்தன.

(எ - கா)

சிங்கம் எங்கே வாழ்ந்து வந்தது ?

சிங்கம் காட்டில் வாழ்ந்து வந்தது ____________ .

1. ஆடுகளும் குட்டிகளும் என்ன செய்து கொண்டிருந்தன?

   ____________________ .

2. எவை கொழு கொழு என்று இருந்தன ?

   ____________________ .

3. ஆட்டுக்குட்டியைப் பாய்ந்து பிடித்தது எது ?

   ____________________ .

4. ஆடுகள் சிங்கத்தை எவற்றால் குத்திக் கொன்றன ?


   ____________________ .

5. எவை மகிழ்ச்சியாக வாழ்ந்தன ?

   ____________________ .

புள்ளிகள் 10

9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ________________________________________

________________________________________

2. ________________________________________

________________________________________

3. ________________________________________

________________________________________

4. ________________________________________

________________________________________

5. ________________________________________

________________________________________

புள்ளிகள் 15